
# கனகலிங்கம் மாமாவும் பரிமளா ஆன்ரியும்



JPL
C11783

சமரபாகு சீனா உதயகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

சமரபாகு சீனா உதயகுமார்
வல்வெட்டித்துறை
0775631205
uthayan7@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகலிங்கம் மாமாவும் பரிமளா ஆன்ரியும்

(கவிதைகளின் சங்கமம்)

KOHA
JPL

11783

சமரபாகு சீனா உதயகுமார்

250625

குபேந்திரா பதிப்பகம்
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

250625 CC.

உ
811

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | கனகலிங்கம் மாமாவும் பரிமளா ஆன்ரியும். |
| வகை | : | கவிதைகள் |
| ஆசிரியர் | : | சமரபாகு சீனா உதயகுமார் |
| முதற்பதிப்பு | : | 14.06.2016 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| முகவரி | : | கூனந்தோட்டம், சமரபாகு, வல்வெட்டித்துறை.<br>தொ.இல : 077 5631205<br>மின்னஞ்சல் : uthayan7@gmail.com |
| அச்சுப்பதிப்பு | : | அன்றா பிறிண்டேர்ஸ்<br>கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| விலை | : | ரூபா.100 |
| ISBN | : | 978- 955-43151-2-9 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

## என்னுரை

ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சுவார்சியமான சம்பவம் நடைபெறுவது வழமை. மற்றவர்கள், அவற்றினை ஒன்றுகூடும் இடங்களில் சொல்லி சிரித்து மகிழ்வர். ஒருவருடைய சிரிப்பு அல்லது ஒரு குழுமத்தினுடைய சிரிப்பு இன்னொருவருக்கு மனதிலே வலிதான தாக்கத்தை ஏற்படுத்துமென்றால் அச்சிரிப்பினை சிரித்தவர்கள் வாழ்வில் எதிலுமே முன்னேற்றம் கண்டுவிட முடியாத பிறவிகளாகவே இருக்கமுடியும்.

எங்களால் ஒருவன் சந்தோசமாக இருந்தான் என்பதிலேயே யாரும் கவனமாக இருக்க வேண்டும். இன்னொருவர் மனம் புண்படும்படி நடந்து கொள்கின்றோம் என்றால், அதன் அர்த்தம் "மற்றவரைப் பார்த்து; மற்றவரின் வளர்ச்சிநிலை அறிந்து பொறாமைப்படுகின்றோம்" என்றுதான் அர்த்தமாகும்.

தங்கள் ஒரு தேவை; தங்கள் பிள்ளைகளின் ஏதோவொரு தேவை நிறைவு பெறும்வரை ஒருவரோடு பழக நினைப்போம் என்ற எண்ணமுடையவர்கள் தாங்களும் முன்னேற்றம் காணாதவர்களாகவும்; தங்கள் பிள்ளைகளும் முன்னேற்றம் பெறாதவர்களாகவும் இருப்பதையே காணமுடிகின்றது. இவர்கள் அதனை உணர்ந்து கொள்கிறார்களோ இல்லையோ, இவர்களுக்கு உதவி செய்தவர் புரிந்துகொள்வார். ஆனாலும், அவற்றினை வெளியே சொல்லிவிடமாட்டார்.

மனிதர்கள் என்றால் இப்படித்தான் வாழவேண்டும் என்ற பண்புநிலை மாறிக்கொண்டு வருவதை யாரும் உணராமல் இல்லை. முகமன் பேசிப்பழகுவதில் வலு திறமைசாலிகளை என் வாழ்நாளில் பலரை நான் கண்டு வியந்திருக்கின்றேன்; அவர்களால் நான் ஏமாறவில்லை. நான் ஏமாந்துவிட்டதாக அவர்கள் கருதுவதை பல தடவை உணர்ந்து இருக்கின்றேன்.

அலுவலகங்களில் தொழில் புரிவோர்; ஆசிரியத்தொழிலில் இருப்போர் எனப் பலருடன் பழகியிருக்கின்றேன். அவர்களில் பெரும்பாலானோர் அரச தொழிலை தங்கள் தனிப்பட்ட அந்தஸ்த்தாக மட்டுமே கருதுகிறார்கள். தவிர மக்களுக்கும், மாணவர்களுக்கும் அரிய சேவை செய்யவேண்டும் என்ற சிந்தனாவாதம் பலரிடம் இருப்பதில்லை. மற்றவர்களிடம் இல்லாத பல குணங்களை இருப்பதாகச் சொல்லி சித்திரிப்பவர்களாக இருக்கவே முயற்சி எடுக்கின்றார்கள். ஆனாலும், சாதாரண மனிதர்கள் அன்பாகவும், உண்மையாகவும் பழகுகிறார்கள். இப்படிப் பார்க்கின்ற போது எனக்குள் தோன்றும் எண்ணம் என்னவென்றால் "படிப்புக் கூடக்கூட அல்லது பதவி கூடக்கூட பலரிடம் மனிதப் பண்பு செத்துப் போகிறதோ, என்று".

ஒவ்வொரு துறை சார்ந்து ஒதுக்கப்படும் அரச நிதிகளில் பெரும்பாலான பங்கினை எவ்வாறு தாம் சுருட்டிப் பதிக்கிக்கொள்ளலாம் என்பதை வடிவாகவே கற்று

நூலகம் நிறுவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கின்றார்கள். பொய்யான கையொப்பங்களும் சிட்டைகளில் இருக்கின்ற பொய்யான கணக்குகளையும் கண்டு மனம் கொதித்துக் கேள்வி கேட்டு முரண்பட்டிருக்கின்றேன். இதனால், அவர்களுக்கு நான் பிடிக்காத ஒருவனாக மாறியிருக்கின்றேன். ஓரிடம்தான் இப்படியென்றால் பெரும்பாலான இடங்களில் அப்படியான படித்த குறும் சிந்தனாவாதிகளே வாழ்கின்றார்கள். இப்படியானவர்களோடு விலத்தி வாழ்வதே எனக்கு மகிழ்ச்சி என்று கருதுகின்றேன். தட்டிக்கேட்டு நீதி, நியாயத்தை நிறுவுதல் என்பது சினிமாவில் மட்டுமே சாத்தியமாகும். யதார்த்த வாழ்வியலுக்கு அவை ஒத்துவராது.

இங்கே "கனகலிங்கம் மாமாவும் பரிமளா ஆன்ரியும்" என்று சொல்கின்ற இக்கவிதைத் தொகுப்பிலே, இவ்விரு பாத்திரங்களும் வெறும் கற்பனைப் பாத்திரங்களே. ஊரில் மற்றும் அயல் ஊரில் நடந்த சம்பவங்களின் ஒரு தொகுப்பாக இத்தொகுதி அமைகின்றது. வேறுவேறு நபர்களின் சம்பவங்களை இவ்விரு நாமங்களில் உள்வாங்கிச் சொல்லியிருக்கின்றேன்.

ஒவ்வொரு சம்பவமும் ஒவ்வொரு நகைச்சுவையினைச் சொல்கிறபோதும் அதனூடாக ஒரு செய்தியினை அது சொல்லியிருக்கிறது. இத்தகைய நபர்களிடம் கல்வி மற்றும் சமூகவியல் பற்றிய சிந்தனாசக்தி என்று எல்லாமும் அளவில் குறைவாகக் காணப்பட்டிருக்கின்றன. அத்தகையவர்களின் சம்பவங்கள் மற்றவர் களுக்குச் சிரிப்பினையும், வேடிக்கையினையும் தருகின்றனவே தவிர, அதனால் எந்தவொருவருக்கும் மன உழைச்சல் என்று எதையுமே அவை தர நினைக்கவில்லை.

படித்துப் பட்டம் பெற்று அரச அதிகாரநிலையில் இருந்துகொண்டு கொள்ளையடிப்போர் ஒரு சிலர் மத்தியில் இத்தகையோர் செயல்கள் என்பது சமாளித்து மனம் ஆறுதல் பெறக்கூடியனவாகும்.

ஆதலால், அதிகார மமதையில் இருந்துகொண்டு மக்களை ஏமாற்றி வயிறும், வசதியும் பெருக்கும் ஊழல் அதிகாரிகளுக்கு இந்நூலினைச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

மேலும், தமிழ் FM, சூரியன் FM குழுமத்திற்கும், வானொலி அறிவிப்பாளர் ரி.எஸ். முகுந்தன் மற்றும் ரேணுகா பிரபாரன், விசு கருணாநிதி, தேவராஜா துஸ்யந்தன், சின்னதம்பி, அன்பரூபன், முதும்பெரும் ஓவியர் தவம் ஐயா அவர்களுக்கும், அன்றா பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் என் மனம் நிறைந்த நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

**-சமரபாகு சீனா உதயகுமார்.**

***21.04.2016***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்

கனகலிங்கம் மாமா

ஆளொரு வில்லங்கமான மனுசன்

அவரைக் கனகு என்றுதான்

ஊரவர் செல்லமாகக் கூப்பிடுவர்..!

“வேலைக்குப் போங்கோ..?

உழைச்சுக்கொண்டு வாருங்கோ..?“ என்றால்

கல்லிலே நார் உரித்தாலும் உரிக்கலாமே தவிர

கனகலிங்கம் மாமா வேலைக்குப் போகவேமாட்டார்...!

அத்தி பூத்தால் போல்

எப்பவாகிலும் வேலைக்குப் போனால்

அதைப் புதினமாகவே

ஊர்ச்சனங்களும் கதைப்பினம்

வேலைக்குப்போன அன்று பின்னேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அடுத்தநாள் என்று

எல்லா நேரமும் மனுசன் சிங்கார நடை நடப்பார்...!

ஒருநாள் வேலைக்குப் போனதை

உலக சாதனையாக நினைத்தார் போலும்...!

"ஏன் மாமா..?

ஒழுங்காக வேலைக்குப் போகலாம்தானே..?" என்று

கேட்டால்

"போடா பொடியா...!

சாப்பாட்டுச் சாமான்கள் விக்கிற விலையில

உழைச்சும் கடன் வாங்க வேண்டித்தானே இருக்குது.....!

அதுதான் பொடியா

உழைச்சாலும் கடன் வருது;

உழைக்காட்டிலும் கடன் வருதெண்டு போட்டு

உழைக்காமல் இருக்கிறன்.!" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்க்கம் செய்தவர் என்றால் பாருங்களேன்...!

யானைவிலை குதிரைவிலை என்று

சாப்பாட்டுச் சாமான்கள் விற்கிற விலையில்

எப்படி உழைச்சாலும்

கடன்பட வேண்டித்தானே இருக்குது..!

கனகலிங்கம் மாமாவின் வாதத்திலும்

ஒரு ஞாயம் இருக்கவே செய்தது!

அதற்காக

ஞாயத்தைப் பறைஞ்சுபோட்டு

உழைக்கப் போகாமல் இருப்பதும் சரியில்லைத்தானே...!

கனகலிங்கம் மாமாவின் மனைவி

பரிமளா ஆன்ரி....! ஆளொரு சூரி....!!

பெட்டி பாய் பனங்கட்டிக்குட்டான் இளைத்து

பன்னவேலை செய்து வீட்டில் இருந்து உழைப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காசை ஒன்பது காசாக்குவதில் ஆளொரு சிங்காரி...!

நாட்டாண்மை பேசுவதிலும் ஆளொரு வாயாடி..!

அவவைப் பற்றிச் சொல்லுறதென்றால்

நிறையவே சொல்லலாம் பாருங்கோ...?

எது எப்படியோ

பரிமளா ஆன்ரி ஆளொரு கெட்டிக்காரிதான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரங்கு - 1**

இப்படித்தான்

ஒரு நாள் காலையிலே

வலு சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தார்

கனகலிங்கம் மாமா!

வேலைக்கும்

போவதாகவல்லோ சொல்லியிருக்கிறார்

அது, பரிமளா ஆன்ரிக்கும் வலு புழுகமாகவே இருந்தது!

பனங்கட்டி கடித்து; தேத்தண்ணி குடிக்கும்

கனகலிங்கம் மாமாவுக்கு

வழக்கத்திற்கும் மாறாக

லக்ஸ்பிறே மா தடிக்கக் கலந்து

பால் காய்ச்சிக் கொண்டு வந்து கொடுத்தார்

பரிமளா ஆன்ரி..!

முட்டைப் பொரியலோடு

குரக்கன் மா பிட்டையும் பிசைந்து சாப்பிட்ட

சாப்பிட்டு முடித்து அடுத்த கணமே

சைக்கிள் எடுத்து சுறுசுறுவென்று திருப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழக்கி ஓடிக்கொண்டிருந்தார்...!

வழி அனுப்பி வைத்த பரிமளா ஆன்ரி

மேற்குத் திசையாகத் திரும்பி

தலைக்கு மேல் கைகள் கூப்பிக் கும்பிட்டார்

"மாடந்தைப் பிள்ளையாரப்பா...! நீதான் துணை..!

இனியாவது ஒழுங்காக வேலைக்குப் போக

என் புருசனுக்கு கருணை காட்டு" என்று வணங்கினார்

தலையிலும் மூன்று முறை குட்டிக் கும்பிட்டார்..!

ஆண்களுக்குத் தொழில் புருச லட்சணம் என்பது

பரிமளா ஆன்ரி நினைக்கிறதிலும்

உண்மையாகத்தான் இருக்குது பாருங்கோ..!

கண்களில் இருந்து வடியும்

ஆனந்தக் கண்ணீரைத் துடைத்தபடி

உள்ளே போனார் பரிமளா ஆன்ரி..!

நேரம் பகல் ஒரு மணிகூட ஆகவில்லை

வலு வேகமாக உழைத்து வந்து சேர்ந்தார்

கனகலிங்கம் மாமா...!

பரிமளா ஆன்ரிக்குச் சந்தோசமோ சந்தோசம்!

இருந்தபோதும் சந்தேகமாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகலிங்கம் மாமாவைப் பார்த்தார்..!

தன்னைக் கண்டு ஓடி வந்த பரிமளா ஆன்ரியிடம்

சைக்கிள் கரியலில் இருந்த

ஆட்டிறைச்சிப் பார்சலைக் கொடுத்து விட்டு

"கெதியாச் சமை...! சரியான அலுப்பா இருக்குதப்பா" என்றார்

வாங்கி வந்த காப்போத்தல் சாராயத்தில்

ஒரு கப் அளவு எடுத்து

வயிற்றுக்குள்ளே தள்ளிவிட்டு

பாயிலே படுத்துறங்க ஆயத்தமானார்..!



பரிமளா ஆன்ரி மளமள விறுவிறு என்று

சமையல் செய்யத் தொடங்கினார்...!

கால் நீட்டி படுத்திருந்த கனகலிங்கம் மாமா

அடிக்கடி தலையை நிமிர்த்துகிறார்

அப்பவும் அடுப்படிப் பக்கம்தான் பார்க்கிறார்

மனுசன் உழைச்சுக் களைத்து வந்ததாலதான்

இப்படிக் கடும்பார்வை பார்த்தாராக்கும்!

ம்...!

பரிமளா ஆன்ரிக்கும் விசயம் விளங்கி வந்தது..!

இன்னும் அவசரமாக்கி சமையலில் இறங்கினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமையல் செய்து முடித்தார்..! ருசியான சாப்பாடு, அது...!

"உன்ர கை பக்குவமும் ஒரு பக்குவம்தானடி அப்பா

நல்ல உருசையாய் கிடக்கு"

இனிப்பாகக் கதைத்தார் கனகலிங்கம் மாமா

பரிமளா ஆன்ரியும் ஆனந்த வெள்ளத்தில் மிதந்தார்...!

அன்று பின்நேரம்

"பாக்... பாக்..." என்று

கோழிகளை வாக்காட்டினார் பரிமளா ஆன்ரி...!

எல்லாக் கோழிகளும் அவவிடம் ஓடி வந்தன

ஆனாலும், அவ வீட்டு

வலுத்த வெள்ளடியன் சேவல் மட்டும் வரவேயில்லை

பரிமளா ஆன்ரி விடுவாவோ...?

அயல் வீடு; அண்டின வீடு என்று

எல்லோரையும் குறி வைத்துத் திட்டித் தாக்கினார்..!

பக்கத்து வீட்டு கமலாக்கா ஓடி வந்தார்

"ஏன் பரிமளா ஆன்ரி ஆரைத் திட்டுறியள்..?" என்று

கமலாக்கா கேட்க

கோழி ஒன்று களவுபோன கதை சொல்லிவிட்டு

திட்டித்தீர்த்தபடி தொடர்ந்தார் பரிமளா ஆன்ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கட வெள்ளடியன் சாவலை சந்தையில விக்கவெண்டு

உங்கட புருசன்தானே கொண்டு வந்து நின்றவர்" என்று

கமலாக்காவும்,

வஞ்சகமில்லாமல் சொன்னதுதான் தாமதம்

பீரங்கிக் குழலில் இருந்து வெளியேறிய

பீரங்கிக் குண்டு போல்

சிர் என்று பாய்ந்து

உள்ளே வந்தார் பரிமளா ஆன்ரி

அங்கே..,

கனகலிங்கம் மாமா காணாமல் போயிருந்தார்..!

24.05.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்கம் - 2

வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுறதும்

பரிமளா ஆன்ரியோடு கனகலிங்கம் மாமா

ஒன்று சேருவதும் ஒன்றுதான் என்று

ஊரில கதைப்பினம்

ஆனாலும் என்ன

வேதாளம் உடனேயே முருங்கை மரத்தில் ஏறும்

கனகு மாமா, இரண்டு மாதம் கழித்து வந்துதான் சேருவார்

என்ன செய்வது...?

எல்லாத்தையும் சமாளிக்கத்தானே வேண்டும்

பரிமளா ஆன்ரியும் சமாளித்துத்தான் பார்த்தார்....!

இப்படித்தான் ஒரு நாள்

கட்டுவேலை செய்யவென்று

நீர்வேலிக்குப் புறப்பட்டுப் போகத் தயாரானார்

கனகு மாமா...!

முதலாளியும் மற்றவர்களும்

வலு வெள்ளெனவாகவே புறப்பட்டுப் போயிருந்தனர்....!

இந்த மனுசன் பாவம்

பொலிகண்டிச் சந்தி வரை நடந்து சென்றவர்

அங்கே, நீண்ட நேரமாக

கால் வலிக்க நின்று பார்த்திருக்கிறார்

பஸ் இன்னும் வரவில்லை....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் வரவில்லை என்பதைச் சாட்டாக வைத்துத்

திரும்பி வீட்டுக்கு நடக்கத் தொடங்கினார்

உவர் வீட்டில் இருந்து பொலிகண்டிச் சந்தித் தூரம்

எப்படியும் இரண்டு மைலுக்குக் குறையாமல்

இருக்கும் பாருங்கோ...!

உவ்வளவு தூரத்திற்கும் நடந்து போய்

கால் நோக நின்று விட்டு நடந்து வாறதென்றால்

எப்படி அலுப்பிருக்கும் என்று தெரியும்தானே...!

கிடுகுப் படலையைத் திறந்து

மெது மெதுவாக உள்ளே கால் வைத்து

நடந்தார் கனகு மாமா

சந்திரமண்டலத்தில் கால் வைத்த பிரமிப்பு

கனகு மாமாவின் நெஞ்சிலும் இருந்திருக்க வேண்டும்

நெஞ்சில் அப்படி ஒரு படபடப்பு

பரிமளா ஆன்ரியின் புறுபுறுப்பு கடுமையாய் இருக்கலாம் என்ற

உள்ளூர பயம்..! அவ்வளவுதான்!

பரிமளா ஆன்ரி அடுப்படியில் இருந்து

வேலை செய்து கொண்டிருந்தார்...!

வானொலிப்பெட்டி பாட்டுப் பாடிக்கொண்டிருந்தது

பாடிக்கொண்டிருந்த பாட்டுக் கேட்டு

மிகக் கடுப்பாகினார் கனகலிங்கம் மாமா

வானொலிப்பெட்டியை தூக்கி நிலத்தில் போட்டு உடைத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்துப் போட்டுச் சொன்னார்

"ஊர்ச்சனங்களுக்குத்தான் நான் பகிடிக்கொரு ஆளெண்டால்

வானொலிப் பெட்டிக்கும்

நானொரு நக்கலாகிப் போனேன்..! ஆ ..! என்று

நெருப்பெடுத்து பேசிக்கொண்டார்...!

வானொலிப்பெட்டி உடைத்த தன் புருசனை

திட்டிக் கொண்டே எழுந்து துரத்திக்கொண்டு வந்தார்

பரிமளா ஆன்றி...!

சுவார்சியமான தூசணங்களும் காற்றில் பறக்கின்றன

போளி விளையாடிக் கொண்டிருந்த எங்களுக்கு

கனகலிங்கம் மாமாவின் பேச்சின் இனிமை கேட்டு

இன்பமாய் ரசித்தோம்

விசில் அடித்து ஆரவாரம் செய்தோம்

அப்படி இதமாகப் பேசிக் கொண்டிருந்தார் பரிமளா ஆன்றியும்..!

பிரச்சினையைத் தீவிரமாக அறிந்த போதுதான்

தெரிந்து கொண்டோம் என்ன பிரச்சினை என்று..!

அது என்ன தெரியுமோ.....?

வேலைக்குப் போக நடந்து போன கனகு மாமா

பஸ் இல்லை என்று திரும்பி வந்திருந்தாரல்லோ...?

கனக்கத் தூரம் நடந்த களைப்பும்தானே...!

வீட்டுப் படலை திறந்து உள்ளே வந்தபோது

அவர் வீட்டு வானொலிப் பெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

253625

என்ன பாட்டுப் பாடியிருந்தது தெரியுமோ...?

நாளை நமதே திரைப்படத்தில் கே.ஜே.ஜேசுதாஸ் பாடிய பாடல்தான் அது;

"நீல நயனங்களில் ஒரு நீண்ட கனவு வந்தது" என்ற பாடலில்

ஒரு வரி வரும் தெரியும்தானே


"கனவு ஏன் வந்தது...? காதல் தான் வந்தது..."

இது கனகு மாமாவின் காதுகளுக்கு

"கனகு ஏன் வந்தது....?" என்றெல்லோ கேட்டிருக்குது

அதனால் வந்த கடுப்புத்தான் உதுவும் பாருங்கோ...!

29.04.2013



11783

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்கம் - 3

கனகலிங்கம் மாமா உழைக்கப் போகமாட்டார்

இது எல்லோருக்கும் தெரிஞ்ச விசயம்தானே

உருட்டு புரட்டுச் சொல்லி

காசு வறுகிறதில ஆளொரு கில்லாடி...!

ஒருக்கால் உப்பிடித்தான்

தன் கையை மணந்து பாருங்கோ என்று சொல்லி

அம்மையாவின் மூக்கருகாய் தன்கைவிரல்களைக் கொண்டு போனார்

எனக்கும் விசயம் விளங்காமல்தான் இருந்தது...!

உறிஞ்சி முகர்ந்து பார்த்த அம்மையாவும்

"என்ன விலை ஆடு? கனகு..! இந்த ஆடு அடிக்கிறதென்றால்

எனக்கும் ஒரு பங்கு தாடா..!" என்று சொல்லியிருக்கிறார்

"உடன் காசுக்குப் போடுறம்..! ஐந்நூறுபாத் தாருங்கோ

இப்ப கொண்டு வாறன் ஆட்டிறைச்சி" என்று கனகலிங்கம் மாமாவும் கேட்க

ஓடிப் போய் ஓடி வந்து ஐந்நூறு ரூபாவை

கனகலிங்கம் மாமாவிடம் குடுத்தார் அம்மையா

வலு புழுகத்தோடு போனவர் போனவர்தான்

பகல் மூன்று மணியாகியும் இன்னும் ஆட்டிறைச்சியும் வரவில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகலிங்கம் மாமாவும் வரவில்லை!

சோறு காய்ச்சிப்போட்டுக் காவல் இருந்த அம்மம்மாவும்

இறைச்சி வரும் வரும் என்று வாசல்வழி பார்த்திருந்தார்

இறைச்சி எங்கை வந்தது..? கடைசி வரை வரவேயில்லை

பாலப்பழம் போல இருந்த

அந்த ஐந்நூறு ரூபாக் குடுக்கேக்க

அம்மம்மாவும் பாத்துக் கொண்டெல்லோ இருந்தவ

அவ விடுவாவோ...?

அம்மையாவை வாய் ஓயாமல் நச்சரித்துக் கொண்டே இருந்தார்

அம்மையா திருப்பி ஒன்றுமே பறையேல...!

அடுத்தநாள் விசயம் விபரிதமாக வந்தது

அம்மையாவைப் போல இன்னும் ஆறு பேர் ஏமாந்திருக்கினமாம்

பக்கத்து வீட்டு சின்னத்தம்பி அண்ணை

ஆடு வளர்க்கிறதில ஆளொரு கெட்டிக்காரன்

எல்லாம் பெரிய பெரிய ஆடுகளாகத்தான் வளர்ப்பார்

அங்கை போய் ஆட்டின் பிடரியில தன் கையை வைத்து அமத்தி

அழுத்தித் தேய் தேய் என்று தேய்த்துப்போட்டு

அந்தக் கை வாசத்தை மணக்கக் குடுத்து

காசு கறந்தவரென்றால் பாருங்களேன்

01.04.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்கம் - 4

போனவாரம் சொன்னது போன்ற

இன்னொரு சம்பவத்தையும்

நான் சொல்லித்தான் ஆகவேண்டும்

என்ன தெரியுமோ...?

வெள்ளை வேட்டி கட்டி; புல்கைசேட்டும் போட்டு;

அதனை மடித்து விட்டுக் கொண்டு வெளிக்கிட்டார் என்றால்

வலு கிளீன் சூட்டாகத்தான் இருப்பார் கனகலிங்கம் மாமா!

மென்மையாய்ச் சிரித்துக் கதைத்தார் என்றால்

மயங்காதவையும் மயங்குவினம்

அப்படி ஆளொரு வசியக்காரன்

ஒருநாள் இந்தமாதிரி வெளிகிட்டுக்கொண்டு

தூரமான ஒரு ஊருக்குப் போயிருக்கிறார்

அங்கே ஒரு வீட்டை எட்டிப் பார்த்திருக்கிறார்

யாரையுமே காணவில்லை...!

"அண்ணெ..! அண்ணெ..!" என்று குரல் குடுக்க

ஆத்துப் பரக்க ஒரு அம்மா ஓடி வந்தார்

"ஏன் என்ன விசயம் சொல்லுங்கோ..?"

வெளியே வந்த அம்மா கேள்வி கேட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகேஸ்வரன் அதிபர் வீட்டுக்குப் போறேன்

கோப்பாயில் இருந்து வந்து

நெல்லியடியில் இறங்கி நடந்து வாறேன்

ரொம்பக் களையாய் இருக்குது

கொஞ்சம் தண்ணி தாருங்கோ அம்மா" என்று

ஒரு விதமாய் கேட்டார்

பாவத்தார் போல அவர் முகம் தெரிந்தது

மகேஸ்வரன் அதிபர் அந்த ஊரில் என்ன

அயல் ஊரிலும் விலாசமான மனிதர்

வந்தவரைப் பார்க்கவும் ரிப்ரொப்பாக இருக்கிறாரே

வந்து, அவர் விசாரிக்கும் அதிபர் வலு மதிப்பானவர்

ஆகவே, வந்தவர் நல்ல மனிதராகத்தான் இருக்க முடியும் என்று

அந்தவீட்டு அம்மாவும் நினைத்துக்கொண்டார் போலும்

இப்ப, தண்ணி எடுக்க பின்னுக்குப் போனார் அந்த அம்மா!

கனகலிங்கம் மாமா வீட்டு வளவினை மேயத் தொடங்கினார்

பெரிய கரியல் சைக்கிள் ஒன்று மாமரத்தோடு சாய்ந்து நின்றது

அதுக்குப் பக்கத்தில் பின்னல் கதிரைகள் இரண்டு

புத்தம் புதிதாய் தெரிந்தன

கனகலிங்கம் மாமா வேகமாகச் செயல்பட்டார்

இரண்டு கதிரைகளையும் எடுத்து கரியரில் வைத்து

11792

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருட்டி வெளியே வந்து உழக்கி ஓடத் தொடங்கினார்

தண்ணிச் செம்போடு வந்த அம்மா

வந்தவரைக் காணாது திகைத்துப் போய் நின்றிட்டார்...

பிறகுதான் பார்த்தார்

சைக்கிளும் இரண்டு கதிரைகளும் காணாமல்

போயிருக்கின்றனவே! என்று

தண்ணிச் செம்பை வைத்துவிட்டு வெளியே ஓடி வந்து பார்த்தார்

வந்தவர் நல்ல ஸ்ரைவாக சைக்கிள் ஓடிப் போய்க்கொண்டிருந்தார்

கனகலிங்கம் மாமாவைத் தாண்டி

இன்னொரு அம்மா நடந்து வந்து கொண்டிருந்தார்

"மச்சாள் கதிரை கொண்டு போற மனுசனை

ஒருக்கால் மறியடி.... டக்கெண்டு மறியடி..." என்று

சத்தம் போட்டுச் சொல்ல

அவவும்

"இஞ்சையங்கோ....! ; இஞ்சையங்கோ...!

உங்களை நிக்கட்டாம்..! ; உங்களை நிக்கட்டாம்...!" என்று

நிற்பாட்டினார்

திரும்பிப் பார்த்த கனகலிங்கம் மாமா

கொஞ்சமும் பயங்கொள்ளாமல் சொன்னார்

"உவ கேக்கிற விலைக்கு இந்தக் கதிரைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால குடுக்கேலாது நான் போட்டுவாறன்" என்று

ஒரு கதிரை வியாபாரிபோல் சொல்லிவிட்டு

சைக்கிளை வேகமாக உழக்கி ஓடத்தொடங்கினார்

படாரென பக்கத்து ஒழுங்கைக்குள் இறங்கினார்

வலு வேகவேகமாக உழக்கி ஓடித்தப்பினார் என்றால்

பாருங்களேன்..! ஐயோ....! ஐயோ....!

06.06.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்கம் - 5

அன்றொரு நாள் கனகலிங்கம் மாமா

தன் வீட்டில் இருந்து நூறு மீற்றர் தூரத்திலிருக்கும்

அப்பால் இருந்த

சீதனக் காணியின் சிதைந்து போன வேலி அடைப்பிற்காக

தன் நண்பர் துரையண்ணையோடு

ஒய்யாரமாக நடந்து போய்க்கொண்டிருந்தார்

காணியும் நல்ல பனங்காணிதானே..!

காவோலைகளும் நிறையப் பரவிக் கிடந்தன

காவோலைளுக்கிடையே சலசலப்போசை கேட்டு

திடுக்குற்றுத்தான் போனார் கனகலிங்கம் மாமா

"டேய் கனகு அங்க பாற்றா கொழுத்த முயலொண்டு

பதுங்கிப் படுத்திருக்கிறார்" என்று

கனகலிங்கம் மாமாவின் காதுக்குள்

மெதுவாய்க் குசுகுசுத்துச் சொன்னார் துரையண்ணை.....!

முயலைப் பார்த்ததும் கனகலிங்கம் மாமாவுக்கும்

வாயூறி வந்திருக்க வேணும்

"இண்டைக்கு மத்தியானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புடி புடிக்கலாம்” என்று

அங்கலாய்த்துக்கொண்டவர்

முதலில் முயலைப் புடிப்போம் என்று

திட்டமும் தீட்டினார்

மெதுமெதுவாக கால்களை எடுத்து

நடந்து வந்த கனகலிங்கம் மாமா

முயல் காணா வண்ணம் பனையொன்றின் பின்னே

ஒளித்து நின்றுகொண்டார்

மெதுவாக மிக மெதுவாக

“சூ....! சூ....!“ என்று

தன் வீட்டு வீமன் நாயைக் கூப்பிட்டார்

இதுபற்றி துரையண்ணைக்கு எதுவுமே விளங்கிவிடவில்லை...!

“ஏன் கனகு...? ஏன் உப்பிடி...?

மெல்லமாய் நாயைக் கூப்பிடுகிறீர் காணும்“ என்று

சத்தமாகவே துரையண்ணையும் கேட்டபோது

“டேய் அறுவானே..! சத்தம் போடாதை எடா

முயலுக்குக் கேட்கக் கூடாது என்றுதானடா

மெதுவாய்ச் சத்தம் போட்டு நான் நாயைக் கூப்பிடுறன்.

நீ என்னடா... எண்டால்.....” என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னதுதான் தாமதம்

பெரிய சத்தமாய் கெக்கட்டம் விட்டு

சிரிச்சுப் போட்டார் துரையண்ணையும்...!

காவோலைக்குள் ஒளிந்திருந்த முயல்

பூரிக் கொண்டு பறந்தோடித் தப்பினதென்றால்

பாருங்களேன்..!

08.03.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்கம் - 6

ஒருநாள் இரவு

மணியாரம்பாதி வெட்டைவெளியில்

கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி இருந்தன

பாட்டுக்குப் பாட்டு..! பாட்டுக்கேற்ற நடிப்பு..!

தேனிசை மழை..! உங்களோடு ஏழு கேள்விகள்..! என்று

நிகழ்ச்சி நிரல் நீண்டிருந்தது

கனகலிங்கம் மாமா, தாளம் முறியாமல், சுருதி பிசகாமல்

பாட்டுப் பாடுவதில் ஆளொரு விண்ணன்

தேனிசை மழை நிகழ்ச்சித் தொகுப்பாளர்

கனகலிங்கம் மாமாவின் பெயரைச் சொல்லி

மேடைக்குக் கூப்பிட்டபோது

பார்வையாளர்களும் உற்சாகமாகவே இருந்தனர்

கரகோசம் என்றால் அப்பிடியொரு கரகோசம்...!

கனகலிங்கம் மாமாவும் உற்சாகமானார்

அவர் பாட்டுப் பாடினால் ஏதாவது வித்தியாசம் செய்வார்

அதை இன்றும் ரசிகர்கள் எதிர்பார்த்தனர் போலும்

பார்வையாளர்களின் கரகோசம் வானைப் பிளந்து வந்தது!

117823

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப பாட்டுப் பாடத்தொடங்கினார்

“காலங்களில் அவள் வெய்யில்

கலைகளிலே அவள் கிறுக்கல்

மாதங்களில் அவள் வைகாசி

மலர்களிலே அவள் தேமா“ என்று பாடிவிட்டு

சரணத்திலே என்ன பாடினார் தெரியுமோ..?

பறவைகளில் அவள் அண்டங்காக்காய்

பாடல்களில் அவள் ஒப்பாரி..!

ஐயோ ஐயோ...

ஓ......ஓ....

ஏன்ர ஐயெ...! என்று ராகம் இழுத்தவர்

ஒரு கணம் திகைத்துத்தான் போனார்

என்ன தெரியுமோ...?

கூட்டத்துக்குள்ளே திடீரென முளைத்த தென்னைமரம் போல

பார்வையாளர் நடுவே பரிமளா ஆன்ரி வலு கோபமாக எழுந்து நின்றார்

மேடை நோக்கி வருவது கண்டு கனகலிங்கம் மாமா

ஒலிவாங்கியை எறிந்துவிட்டு ஓட்டம் எடுத்தார்

ஒலிம்பிக் பந்தயத்தில் கூட யாரும் ஓடியிருக்கமாட்டினம்

அண்டைக்கு, அப்பிடியொரு ஓட்டம் ஓடினவர் பாருங்கோ...!

11.06.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

250626

## அரங்கம் - 7

மணியாரம்பாதி வெட்டையில்

இன்று இரவு திரைப்படக்காட்சி என்று

ஸ்பீக்கர் கட்டி அறிவித்துக்கொண்டிருந்தனர்

அறிவிப்புகளும் ஒரு விதமாய் இருந்தன

மக்கள் திலகம், புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்;

மயக்கும் மங்கை மஞ்சுளா நடிக்கும் படம்தான்

"நேற்று இன்று நாளை"

வாரீர் வந்து பாரீர்

சிறியோர் ஒரு ரூபாய் பெரியோர் இரண்டு ரூபாய்

இப்படியான அறிவிப்பைக் கேட்டாலே

படம் பார்க்க விரும்பாதவையும் படம் பார்க்கப் போய்விடுவினம்

இந்த அறிவிப்பைக் கேட்டுக்கேட்டு

சுட்டு விரலோடு நடுவிரலையும் ஒன்று சேர்த்து

தன் மூக்கினை ஒரு விதமாய்த் தொட்டுத்தொட்டு எடுத்து

தானொரு எம்.ஜி.ஆர் ரசிகன் என்று

எம்.ஜி.ஆரின் ஸ்ரைல் கொண்டு நடந்து திரிந்தார்

கனகலிங்கம் மாமா...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை எல்லாம் பார்க்கும் போது

முகத்தை “ம்” என்று வைத்து

புறுபுறுத்து புருசனைத் திட்டிக்கொண்டு திரிந்தார்

பரிமளா ஆன்றி...

ஏ-போட்டி காறில் ரீவி வந்து இறங்கும்போது

சிறுவர்கள் நாங்கள் விசில் அடித்து ஆரவாரம் புரிந்தோம்

அந்தக் காலத்தில் இவை எல்லாம் அப்படித்தான்

மளமள விறுவிறு என்று வெளிக்கிட்டு

கனகலிங்கம் மாமாவோடு பரிமளா ஆன்றியும் புறப்பட்டு வந்தார்

அவவுக்கும் எம்.ஜி.ஆர் படம் என்றால் உயிர்

ஓரளவு புதுசான சாறி கட்டி குங்குமப்பொட்டும் வைத்து

கொண்டை முடியினை உசத்திக் கட்டினார்

வலு எடுப்பாக கைகளை விசிக்கி நடந்து வந்தார் பரிமளா ஆன்றி

ரீவியில வருகிற எம்.ஜி.ஆரைப் பார்க்க

வேறு பெண்களும் அழகாய் வெளிக்குடுத்தித்தான் வந்திருந்தனர்!

கனகலிங்கம் மாமா ஒரு ஓரமாய் இருந்து படம் பார்த்தார்

எழுத்தோட்டம் ஓடும் போதே..!

விசில் சத்தம் வானைப் பிளந்து போனது

கனகலிங்கம் மாமா உரு வந்தவர் போல் எழுந்து நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகள் இரண்டையும் தலைக்கு மேல் வைத்துத் தட்டினார்

பிறகு

சுட்டு விரல்கள் இரண்டையும் நாக்கின் கீழே வைத்து

நாக்கினை உள்ளே மடித்து விசில் அடித்தார்

பார்வையாளருக்கும் ஒரே உற்சாகம்

எம்.ஜி.ஆருக்காக

உயிர் கொடுக்கவும் தயங்க மாட்டார்கள் போலும்

எம்.ஜி.ஆர் என்றால் உயிராக இருந்தனர்

திரையிலே சண்டை ஒன்று முடிந்து

பாட்டு ஒன்று தொடங்கியிருந்தது

"நீ என்னென்ன சொன்னாலும் கவிதை

உன்னை எங்கெங்கு தொட்டாலும் இளமை..." என்ற பாடலுக்கு

தன் அத்தனை உடல் கவர்ச்சிகளையும்

தவாளிப்பாய் காட்டி அசத்திக் கொண்டிருந்தார்

மயக்கும் மங்கை மஞ்சுளா

ஓரளவு போதையோடு படம் பார்த்து ரசித்த கனகலிங்கம் மாமா

எழுந்து நின்று விட்டார்

இரு கைகளையும் திரை நோக்கி நீட்டி

"மயக்கும் மங்கையே மஞ்சுளா

உன்னை ஒரு கணம் பிரிந்து எங்ஙனம் யான் உயிர் வாழ்வேன்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பிடியே வாம்மா...! அப்பிடியே வாம்மா...!

என் வீடு வாசல்; சொத்து சுகம் எல்லாமும் உனக்குத்தான்

அப்பிடியே வாம்மா..." என்று பீடிகை போட்டார்

இது பார்வையாளர்களுக்கு முசுப்பாத்தியாகவும்

பரிமளா ஆன்ரிக்கு அவமானமாகவும் இருந்தது

பத்திரகாளியாய் எழுந்து நின்றார் பரிமளா ஆன்ரி

"அஞ்சியக் காசு உழைக்கப் போகமாட்டார்

மயக்கும் மங்கை மஞ்சுளா தேவைப்படுதாம்..?

சொத்து சுகம் கொடுக்கப் போறாராம்...! சொத்து சுகம்...!

ஆளை ஒருக்கால் புடிச்சு தாருங்கொடி" என்று

பரிமளா ஆன்ரியின் வாயில் இருந்து

குதித்த வார்த்தைகளின் ஜாலம் கண்டு

கனகலிங்கம் மாமா போன போக்குத் தெரியுமே...!

"என்ன சொல்லி நான் எழுத

என் மன்னவனின் மனம் குளிர" என்று பாடவேண்டிய பாடலை

"என்ன சொல்லி நான் அழுவ

என் மன்னவனின் மனம் திருந்த" என்று

பாட்டுப் பாடிக் கொண்டே வீடு போய்ச் சேர்ந்தார்

பரிமளா ஆன்ரி!

14.06.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்கம் - 8

பொலிஸ்நிலையம் நோக்கி

மூச்சிரைக்க ஓடி வருகிறார் கனகலிங்கம் மாமா

பொலிஸ் நிலையத்திற்குள் புகுந்தவர்

"என்னைக் காப்பாத்துங்கோ இன்சுப்பெக்டர்..!

என்னைக் காப்பாத்துங்கோ...!" என்று

இன்ஸ்பெக்டரின் காலில் விழுந்தார் கனகலிங்கம் மாமா

"ஏன் என்னாச்சு....?" இன்ஸ்பெக்டர் கேட்டார்

'எனக்கும் என் மனைவிக்கும் சண்டை

அவளிடம் சண்டை செய்யும் அருகதை எனக்கில்லை

என்றாலும் இன்று நான்

ரொம்பவே விபரீதமாய் நடந்து போட்டேன் சேர்

நான் ஒரு உழைப்பில்லாதவன்

என்பதைக் காரணமாக வைச்சு

என்னை வம்புக்கு இழுத்துத் திட்டுகிறாள் என்ர மனிசி!

அவளின் அறம் முறிஞ்ச திட்டுகளால்

எத்தனைமுறைதான்

என்னாலும் அவமானப்பட முடியும்....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை முறைதான்

அவளின் அழுங்குப் பிடியிலிருந்து தப்பி

மூச்சைப் பிடித்து ஓடித்தப்ப முடியும்.....?

இப்பவும் அதிலிருந்து தப்பிப் பிளைத்த நான்

பக்கத்தில் இருந்த பூச்சாடிக் கல்லைத் தூக்கி

அவள் தலை நோக்கி எறிஞ்சு போட்டேன்

ஐயகோ...! என்று அலறிக் களைத்து

இந்தக் கதை சொல்லி முடிப்பதற்குள்

நடிகர்திலகம் சிவாஜிகணேசன் ஸ்ரைலில்

"ஓ....! மைகாட்...!" என்று

சிம்மக்குரலில் கர்ச்சித்த இன்ஸ்பெக்டரும்

இருக்கையில் இருந்து எழுந்து நின்றார்

'சாடிக்கல்லைக் கஸ்ரப்பட்டுத் தூக்கி

அவள் தலையை நோக்கி வலு வேகமாக எறிஞ்சன்

குறி தவறிப்போட்டுது இன்சுப்பெக்டர்

இப்ப அவள் என்னைத் துரத்தி வருகிறாள்

அவளிடமிருந்து என்னைக் காப்பாத்துங்கோ இன்சுப்பெக்டர்

அவளிடமிருந்து என்னைக் காப்பாத்துங்கோ இன்சுப்பெக்டர்" என்று

அசடு வழிந்தார் எண்டால் பாருங்களேன்..!

20.06.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்கம் - 9

இவர்கள் இரண்டு பேரும்

அடிக்கடி சண்டையும் செய்வினம்

இடையிடை ஒற்றுமையாகவும் இருப்பினம்

பாருங்கோ...?

ஒரு காசை ஒன்பது காசாக்கத் தெரிந்த

பரிமளம் ஆன்ரி

சிறுகச்சிறுகச் சேமித்த காசையும்

ஊரில இரண்டு மூன்று பேரிடம்

சீட்டுப்பிடிச்ச காசையும் சேர்த்து

“சைனா லான்ஸ்சர் மொடல்“

மோட்டச் சைக்கிள் ஒன்று எடுத்திருந்தா

கனகலிங்கம் மாமா ஓட

இவ பின்னுக்கு ஸ்ரைலாக இருப்பா

நாகபாம்பு போல

தன்கையை அவரின் தோளில் கொழுவி

ஊர்த்தெருவால் ஓடி

பெரிய பெரிய “ரவுணெல்லாம்“ போய் வருவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிச் சோடியாகப் பார்க்க

நல்ல வடிவாகவும் இருக்கும்

அடிக்கடி இதே கொண்டிசனில்

மரக்கறி, மீன், இறைச்சி என்று எல்லாம் வாங்கிவர

பரிமளா ஆன்ரிக்கும் கொள்ளை ஆசைதான்..!

“வாழ்க்கையெண்டால் இப்படி வாழ்ந்தால்தான்

வாழ்க்கையும் இனிக்கும்

அப்பிடியில்லாட்டி அதென்ன வாழ்க்கை“ என்று

பரிமளா ஆன்ரி அடிக்கடி

ஊர்பொண்டுகளோடு ஞாயம் பறையிறவதானே...!

ஒருநாள் இப்படித்தான்

மோட்டர் சைக்கிளின் பின்னுக்குப்

பரிமளா ஆன்ரி இருக்க

மோட்டர்ச் சைக்கிளை

வலு ஸ்ரைலாக ஓட்டிக்கொண்டு போனார்

கனகலிங்கம் மாமா

கூலிங் கிளாசும் போட்டிருக்கிறார்

இவர்கள் போகிற கொண்டிசனைப் பார்த்து

பரஞ்சோதி அப்புவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சூ....சைல்...!

பொங்கை பாரன்டா

கனகனும் கலக்குறான்டா" என்று

பொக்கை வாயைத் திறந்து பகிடி விட

கனகலிங்கம் மாமாவும்

சிரிச்சுக்கொண்டு மோட்டர் சைக்கிள் ஓட்டிக்கொண்டு போனார்

கோயில் ஆலமரத்துக் கீழே நின்ற பொடியளுக்கெல்லாம்

இக்கண்கொள்ளாக்காட்சி என்பது

இன்னோர் அதிசயமாகவே இருந்தது

இவர்கள் இருவரும்

வருகின்ற அழகு பார்த்துக் குதூகலித்தனர்

நம்பியாரும் எம்ஜிஆரும்

ஒன்றாக வருவது போலவே

இவர்கள் இருவரின்

வருகையும் தெரிந்தது போலும்

"கனகலிங்கம் மாமா..! கனகலிங்கம் மாமா..!

நீங்களோ உதில போறியள்....?

போங்க போங்க....!

பரிமளா ஆன்ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாக் கலக்கட்டும்..! கலக்கட்டும்..!" என்று சொல்லவும்

தூங்கி விழுந்த சேலையைத் தூக்கி விட்டு

கழுத்தை ஒரு சிறு கோணமாகத் திருப்பி

எடுப்பாகப் பொடியளைப் பார்த்து சிரிக்கிறார்

பரிமளா ஆன்றி..!

பொலிகண்டிச் சந்தி வர

அங்கு நின்ற

இரண்டு ட்ரபிக் பொலிஸ்காரரில் ஒருவன்

இவர்களை இடை மறித்து நிற்பாட்டினான்

"நிறுத்துங்க...! நிறுத்துங்க..." என்று

அப்பதான் கனகலிங்கம் மாமாவுக்கு

விசயம் விளங்கி வந்தது

"கெல்மட் போடாமல் வந்திருக்கிறேனே...!

இப்ப நான் என்ன செய்ய" என்று யோசித்தபடி

ஒரு பதட்டத்தோடு

மோட்டர் சைக்கிளில் இருந்து இறங்கினார்!

பரிமளம் ஆன்றியும் விசயம் விளங்காமல்

சேலை மடிப்புகளைச் சரிசெய்வதில்

மும்முரமாக நின்று கொண்டிருந்தார்

தானொரு ஸ்ரைல்காரி என்றுதான் அவவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பவும் நினைப்பு இருக்குது பாருங்கோ

“லைசன்ஸ், ரக்ஸ், இன்சூரன்ஸ்

எல்லாத்தையும் எடுங்க..?“ என்று கேட்டு

பொலிஸ்காரன் சொல்லி முடிப்பதற்குள்

“ஐயோ தம்பியவை.... !

இதிலை நீங்கள் நிப்பியள் எண்டு தெரிஞ்சிருந்தால்

நான் அதாலையல்லோ போயிருப்பன்“

வெகுளியாகவே சொன்னார் கனகலிங்கம் மாமா..!

பொலிஸ்காரன் சிரிக்கத்தொடங்கினான்

அவனும் சிரிசிரியெண்டு சிரிச்சுப்போட்டு

“இதுதான் கடைசியும் முதலும்...!

சரி இப்ப போயிட்டுவாங்க“ என்று

சொல்லி வழியனுப்பிவைத்தான் என்றால் பாருங்களேன்.

27.03.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் ஏனைய நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | புள்ளிவிபரவியல் | (கணிதம்) |
| 2. | வெற்றியுடன் | (கவிதை) |
| 3. | உடைந்த நினைவுகள் | (கவிதை) |
| 4. | செந்நீரும் கண்ணீரும் | (சிறுகதை) |
| 5. | பகிர்வு | (பல்சுவைக் கட்டுரைகள்) |
| 6. | என் பேனாவின் நிதர்சனம் | (கவிதை) |
| 7. | பகிர்ந்துண்ணல் | (சிறுவர் இலக்கியம்) |
| 8. | சித்திரா ரீச்சர் | (சிறுகதை) |
| 9. | காதல் வந்த சாலை | (கவிதை) |
| 10. | காதலியுடன் பேசுதல் | (கவிதை) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


250625

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆசிரியரின் ஏனைய நூல்கள்...






















ISBN No. 978-955-43151-2-9

Print@: Andra Printers, Jaffna. | 021 222 8929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org